# "தேசிய அரசுக்கு சுதந்திரக்கட்சி ஒத்துழைக்காது"

## — சிறிமா அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைக்கும் நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்தவிதத்திலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்காது எனச் சுதந்திரக்கட்சித் தலைவி

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 83 திருவள்ளுவர் ஆண்டு 202 ஆனி 30 இதழ் 149
யாழ்ப்பாணம் புதன்கிழமை 14 - 07 - 1993

## பத்திரிகைச் செய்திக்கு அநுரா மறுப்பு!

(கொழும்பு)

தேசிய அரசு ஒன்றை அமைக்கும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக தான் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்திய

(4-ம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தல் ஒன்றே இப்போது தேவை — தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

"பொதுமக்களுக்கு இப்போது தேவையானது ஒரு பொதுத் தேர்தலே தவிர தேசிய அரசு அல்ல' மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு தினேஷ் குணவர்த்தன

(4-ம் பக்கம் பார்க்க)

★ இன்று மேற்கொள்ளப்படவிருந்த

# யுத்தகைதிகள் உண்ணாவிரதம் சிலதினங்களுக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகள் இன்று மேற்கொள்ள விருந்த சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒருசில தினங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 13-ம் திகதி தாம் ஆரம்பித்திருந்த உண்ணாவிரதத்தில் பங்குபற்றிய ஐந்து கைதிகளின் உடல் நிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தாலேயே இன்று மேற்கொள்ள விருந்த உண்ணாவிரதம் பிற்போடப்பட்டுள்ளதாக யுத்தக் கைதிகள் கூறியதாக புலிகளின் 'குரல்' வானொலி தெரிவித்தது.

யுத்தக்கைதிகள் 33பேருடன் அவர்களின் பெற்றோரும் உண்ணாவிரதம் மேற்கொள்ள

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - அரசு பேச்சுக்கு இராணுவம் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்குடன் அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இராணுவத்திலுள்ள தீவிரப்போக்குடையோர் விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது இதற்கு இராணுவம் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குப் பதிலாக இராணுவத் தீர்வையே இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## "பிரதேச சுயாட்சியே இனப் பிரச்னைக்கு தீர்வு"

### — கெனமன் யோசனை

(கொழும்பு)

இனப் பிரச்னைக்கு பிரதேச சுயாட்சி மூலமே அரசியல் தீர்வு காணமுடியும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:- மத்திய அரசாங்கத்திடம் இருக்கும் அதிகாரங்களை பரவலாக்குவதன் மூலமே இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக்காண முடியும். இராணுவ நடவடிக்கை மூலம் பிரச்னையைத் தீர்க்க முடியாது. பிரதேச சுயாட்சி என்ற அடிப்படையில் நாம் ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக இருக்கின்றோம்.

இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அரசாங்கம் அதன் தீர்வு யோசனைகளை முன்வைத்திருக்க வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ரசாயன மருந்து ஏற்றிய பழவகைகள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது இரசாயன மருந்துகள் ஏற்றப்பட்ட பழ வகைகள் விற்பனை செய்யப்பட்டுவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கல்வியங்காட்டுச் சந்தையில் இவ்வாறான பழ வகைகளை விற்பனை செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மற்றும் இன்பருட்டி கடலில் நிலைகொண்டுள்ள கடற்படை பீரங்கிப்படகுகளிலிருந்து படையினர் கடந்த சிலதினங்களாக மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இச் ஷெல்தாக்குதல்களினால் அச்சமடைந்த மீனவர்கள் கடலுக்கு செல்வதற்கு அஞ்சுகின்றனர். (சி)

## கிளாலி கடற்பரப்பில் 50கலிபர் தாக்குதல்

(எழுதுமட்டுவாள்)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று மாலை 6-25 மணியிலிருந்து சுமார் 15 நிமிடங்கள் வரை தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் 50 கலிபர் தாக்குதல்களும் இடம் பெற்றன.

விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் இக்கடற்பரப்பில் நேற்று மாலை மோதல் ஏற்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (170

## ஓய்வூதியம் பெறுவதில் சிரமப்படும் தமிழர்கள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது கொழும்பில்வசித்து வரும், ஓய்வூதியம் பெறும் தமிழர்கள் தமது ஓய்வூதியத்தை அங்கு பெறமுடியாது பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து மேற்படி ஓய்வூதியம் பெற்றவர்களின் தஷ்

(4ம் பக்கம் பார்க்க)

## பொது எழுதுவினைஞர் பதவியுயர்வுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுவினைஞர் சேவை அதிசிறப்பு வகுப்பு சேவை மூப்பு அடிப்படையிலான பதவி உயர்வுப் பரீட்சை எதிர்வரும் 31-ம் திகதி கொழும்பில் நடை

(4-ம்பக்கம் பார்க்க)

## தகவல்துறை அமைச்சருக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)

வானொலி, தொலைக்காட்சி சேவை செய்திகளை பரப்புவதற்காக பாவிக்கப்படக் கூடாது என்றும் தகவல்களை தெரிவிப்பதற்காகவே பயன்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கடுமையான அறிவுறுத்து ஒன்றை தகவல்துறை அமைச்சர் டபிள்யூ ஜே. எம். லொக்கு பண்டாரவிற்கு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தகவல்துறை அமைச்சருக்கு தெரிவித்த

(4-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை வழக்கிற்கு தடா சட்டம் பொருந்தாது - எதிர்த் தரப்பில் வாதம்

(லண்டன்)

ராஜீவ்காந்தி கொலைவழக்கு மற்ற எந்த கொலை வழக்கையும் போலவே நடத்தப்பட வேண்டும். 'தடா' என்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இதற்குப் பொருத்தக் கூடாது.

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் எதிர் தரப்பு வழக்கறிஞர் சி. ராமதாஸ் நேற்று தமது வாதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சென்னையில் தனி நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடைபெற்றது.

வழக்கறிஞர் ராமதாஸ் தனது வாதத்தில் மேலும் தெரிவித்ததாவது:

கொல்லப்பட்ட ராஜீவ்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### சிறுவர் கதை நூல்

உங்கள் சிறு பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க: வரதர் கதை மலர்-1 — 'அவன் பெரியவன்' — அநு. வை. நாகராஜன் எழுதிய சுவையான கதை நூல். ரூபா 12. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (எ3248)

### தேவை

காசாளர் ஒருவரும் பில் கிளாக் ஒருவரும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 15-07-93க்கு முன்னர் நேரில் சமுகம் தரவும். சன்லைட் றைக்கிளினர்ஸ், 23, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி-309)

### தவறிவிட்டது

180, கே. கே. எஸ். வீதியில் வசிக்கும் சு. சரோஜினி ஆகிய எனது அடையாள அட்டை இல: 616710320 X தவறிவிட்டது தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். ச. பாலசுப்பிரமணியம், 337, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (கி-314)

### திருமண சேவை

படித்த உத்தியோகம் பார்க்கத் தகைமை உள்ள மணப்பெண்களுக்கு வெளிநாட்டுப் பட்டதாரி வரன்கள் உள்ளனர். சீதன ரொக்கம் எதிர்பார்க்கப்படமாட்டாது இலங்கை வந்து விவாகம் செய்து அழைத்துச் செல்லலாம். பின்பு கொழும்பு வந்து செல்ல இலவச Passage உண்டு. தொடர்பு:- திருமண ஒன்றியம், கோப்பாய். (கி-316)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு-5)

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள் 18-07-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-317)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் *G.V. Kanesalinkam* என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
*G.V. Kanesalinkam*,
298, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(கி 252)

### படிவங்கள் முடிவடைந்தன

(மானிப்பாய்)

யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் 1-8-1954ம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு எழுதி வழங்கப்படும் இருபக்க படிவங்கள் முடிவடைந்து விட்டன.

இதனால் இவர்களது பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இக்காரியாலய கரும பீடத்தில் மறு அறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென மேலதிக மாவட்ட பதிவாளர் அறிவித்துள்ளார். (71)

---

கல்வி

## செயற்பாடு பாதிப்பு

(அச்சுவேலி)

விஷமிகளின் நடவடிக்கையினால் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது. வகுப்பறை அசுப்படுத்தல், பாடசாலையின் பூட்டுக்களைச் சேதப்படுத்துதல் முதலிய செயல்கள் மூலம் இடையூறு விளைவிப்பதாகக் கூறப்படுகின்றது. (74-கி)

## விண்ணப்ப தேதி நீடிப்பு

(ஆனைப்பந்தி)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கி வரும் மாவீரர் நற்பணிமன்ற விளையாட்டுக் குழுவினால் நடாத்தப்படவுள்ள உதைபந்தாட்ட, கரபந்தாட்ட போட்டிகளில் கரபந்தாட்டப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 15ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (101)

---

திருநெல்வேலி அரசடி ஸ்ரீசிவகாமசுந்தரி

## அம்மன் தேவஸ்தானம்

## ஆடிப்பூரத்தை முன்னிட்டு லட்சார்ச்சனை ஹோமம்

**ஆரம்பம்: 14-7-93 புதன்கிழமை**

**பூர்த்தி: 23-7-93 வெள்ளிக்கிழமை**

தினமும் மாலை 5 — 7 மணி வரை நடைபெறும் 23-7-93 அன்று லட்சார்ச்சனை பகல் 10.30 மணிக்கு நடைபெறும் மாலை 4 மணிக்கு ஆடிப் பூரகர் மங்கம்

அனைவரையும் அம்பாளைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறும்வண்ணம் வேண்டுகிறோம்.

விசேஷமாக நயினைசென்று அம்பாளின் லட்சார்ச்சனையைத் தரிசிக்கமுடியாத அடியார்கள் அம்பாளைத்தரிசித்து இஷ்டசித்திகளைபெறும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்

ச. தணிகாசலம்
டி தேவஸ்தான தர்மகர்த்தா

அம்பாளின் லட்சார்ச்சனை வெகு சிறப்பாக நடைபெற்று அனைவர்க்கும் அம்பாள் நல்லருள் புரியப் பிரார்த்திக்கிறோம்

**குறிஞ்சி மெடிக்கல்ஸ் & குரோசறீஸ்**

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, தெற்கு.

(கி 313)

---

## இராசி பலன்

14-07-1993
புதன்கிழமை
(தமிழுக்கு ஆனி 30)

தசமி மாலை 6-59 வரை, பரணி பி. ப. 4-14 வரை, சித்தாமிர்தயோகம், இராகு காலம் பகல் 12-00 முதல் 1-30 வரை, சுபநேரம் மாலை 4-30 முதல் 6-00 வரை, கார்த்திகை விரதம்.

மேஷம்: கருத்துப் பரிமாற்றம், மனநிறைவு, பணவரவு.

இடபம்: வாக்குப்பகை, தொழில் மந்தம், வெறுப்பு.

மிதுனம்: சுபகாரியம், குடும்பசுகம், பயண நன்மை.

கடகம்: முதியவர் ஆசி, கல்விச் சிறப்பு, காரியசித்தி.

சிம்மம்: தொழில் கௌரவம், குளம்பியநிலை, அலைச்சல்.

கன்னி: மனச் சஞ்சலம், பிணக்கு, குடும்ப கவலை.

துலாம்: உறவினர் வருகை, கடமையுணர்வு, புகழ்

விருச்சிகம்: அயலவர் நட்பு. பதவி மாற்றம், புத்திரர் செலவு.

தனுசு: புதியசிக்கல், குடும்ப பிரிவு, பணமுடை.

மகரம்; மனச்சங்கடம், பணியால் துன்பம், ஏமாற்றம்.

கும்பம்: தொழில் லாபம், நண்பர் சகாயம், தெய்வீக செலவு.

மீனம்: பழைய நினைவுகள், கடன்பகை, தவறான போக்கு.

ஜோஸ்யர்

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு

**6ம் தவணைப் பணம்**

பல்கலைக்கழக மாணவர்களுக்கான 6-ம் தவணை மகாபொலக் கொடுப்பனவுகளை 14-07-93 முதல் வழங்க பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இக் கொடுப்பனவுகள் பற்றிய முழு விபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாக கொடுப்பனவை உருத்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்.

(ஏ-3252)

---

மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம்

## வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் 18-7-93 ஞாயிறு மு. ப. 9-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்துவத்தை புதுப்பிக்க வேண்டியவர்கள் ரூ. 15/- ஐ செலுத்திப் புதுப்பிக்கவும்.

பழைய மாணவிகள் எல்லோரையும் பங்குபற்றி அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். விபரங்களுக்கு: அதிபரை பி. ப. 1-00—பி. ப. 3-00 மணிக்கும் இடையில் காரியாலயத்தில் சந்திக்கவும்.

பொதுக் கூட்டமும், அங்கத்தவர் தெரிவும் அன்று மாலை 3-00 மணிக்கு நடைபெறும்.


திருமதி வி. பசுபதிப்பிள்ளை
தலைவர்.

திருமதி நீ. விஜயசுந்தரம்
செயலாளர்

(கி- 315)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
24-03-1934
★
உதிர்வு:
06-07-1991
★
திதி:
14-07-1993

**தவில்மேதை N. R. சின்னராசா**
(இணுவில்)

தவிலுண்டு! தவிலோடு நீயிருக்க அசையாத
தலையுண்டோ!
ஆடாத மனமுண்டோ! தாளம் போடாத கையு
முண்டோ?

தவிலுண்டு தவிலோடு நீயில்லை
தவிலோடு உனைக்காணும் கண்ணுக்கு என்ன
சொல்ல?
நாதத்தை நயந்து கேட்கும் காதுக்கு என்ன
சொல்ல?
நடைகளைப் புகழ்ந்து பேசும் நாவுக்கு என்ன
சொல்ல?

தவிலுண்டு தவிலோடு நீயில்லை

அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
சிங்கம்ஸ் பார்மஸி

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி 3251)

---

மருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண
சாரதா சேவாச்சிரமம்
நடாத்தும்

## சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்ச்சி

ஸ்ரீராமகிருஷ்ண - விவேகானந்த
**புத்தகக் கண்காட்சி**

காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணிவரை

இடம்: பலாலி ஆசிரிய கலாசாலை
திகதி: 16-7-93 வெள்ளிக்கிழமை

திரு: ஆர். எஸ். நடராசா அவர்கள்
(அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)
புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்கள்

முக்கிய குறிப்பு: ஆசிரிய கலாசாலையில் உள்ளவர்களுக்கு மட்டும் புத்தகங்கள் விற்பனைசெய்யப்படும்.

(ஏ 3249)

# தெரிவுக்குழு தொடர்ந்தும் இயங்கும் சாத்தியமில்லை!

## மங்கள முனசிங்கா விலகுவார்?

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்ந்தும் இயங்கும் சாத்தியமில்லை என கொழும்பின் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தெரிவுக் குழுவிலிருந்து விலகுவதால் இதன் தலைவர் திரு. மங்கள முனசிங்காவும் இதிலிருந்து வெளியேறவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தெரிவுக் குழு தொடர்ந்தும் இயங்க முடியாத நிலை ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. தமிழ், முஸ்லிம் கட்சிகளை மீண்டும் தெரிவுக் குழுவினுள் கொண்டுவர எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் தோல்வியடைந்து விட்டதும் தெரிந்ததே. (ஓ)

### இரத்தின நவரத்தினம் காலமானார்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ் கல்விப் பணிப்பாளர் திருமதி இரத்தின நவரத்தினம் அண்மையில் கனடாவில் காலமானார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபரும், சைவ மங்கையர் சபைத் தலைவருமான இவர் சமூக சேவைகளிலும், சமயத் தொண்டுகளிலும் பெரும் பணி காற்றியுள்ளார். இவர் சமய சம்பந்தமான பலநூல்களையும் எழுதியுள்ளார். (162)

### மணிவாக்கு

நிறைய எண்ணெய் இருப்பினும் காற்று அடிக்கும் போது தீபம் அணையும். நல்ல செயல்கள் பல இருப்பினும் கெட்டசெயல் ஒன்றால் யாவும் அழியும்.

### நமது நோக்கு

## எலி வளையானாலும்!

"இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆண்டுதோறும் ஆயுதப் படையினருக்கு நாலரைக் கோடி ரூபாவைக் காப்புறுதிக் கொடுப்பனவாக வழங்குகின்றது" இது செய்தி.

இராணுவத் தீர்வு என்ற பஜனைக்கு வாசிக்கப்படும் பல பக்க வாத்தியங்களில் இதுவும் ஒன்றோ என்றுதான் எண்ண வைக்கின்றது!

இக்கூட்டுத்தாபனம், இலங்கை முழுவதையும் ஒரே நாடாகக் கருதிச் செயற்படுகின்றதா என்ற சந்தேகமும் தோன்றுகின்றது.

வடகிழக்குப் பகுதிகட்குப் பாகுபாடாகச் செயற்பட்டுவருகின்றது என அப்பகுதி மக்கள் அதிருப்தியடைந்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

ஒரு கண்ணிற்கு சுண்ணாம்பும் ஒரு கண்ணுக்கு வெண்ணெய்யும் என்ற ரீதியில் இது செயற்படுகின்றதா?

வடகிழக்குப் பகுதி அப்பாவிப் பொதுமக்கள் வன்செயல் அழிவுகளைச் சந்திப்பது சகல நிச்சயம்— எப்பவோ முடிந்த காரியம் என்ற எண்ணத்தில் அப்பகுதி மக்கள் காப்புறுதிக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற நினைப்போடு செயற்பட்டு வருகிறார்களோ தெரியவில்லை!

நாம் சுட்டிக்காட்ட விரும்புவது என்ன? வடகிழக்கில் ஏற்படும் வன்செயல் அழிவுகளுக்கு இழப்புகளுக்கு 1983ஆம் ஆண்டிலிருந்து இக் கூட்டுத்தாபனத்தால் காப்புறுதி செய்யப்படுவதில்லை!

பாதுகாப்பு வலயம் விஸ்தரிக்கப்படுகின்றது தேடி அழிக்கிறோம் எனக் கூறிக்கொண்டு பொது மக்கள் வாழும்பகுதிகளில் எறிகணைகளும் விமானக் குண்டுகளும் வீசப்படுகின்றன. உயிரிழப்புக்களையும் உடமைச் சேதங்களையும் அறியாதார் யார்?

படையினருக்குக் காப்புறுதி வழங்கும் கூட்டுத்தாபனம் படையினரால் பாதிக்கப்படுவோருக்குக் காப்புறுதி செய்யாதிருப்பது நியாயமானதா?

"உங்களுக்குஏது குறை? ஏனிந்தப் போராட்டம்?' என ஆலோசனைப் பொன்மொழிகள் வழங்கும் தென்னிலங்கைப் பத்திரிகைளுக்கு இத்தகைய பாகுபாடுகள் தெரிவதில்லையா? புனைகதைகளை இட்டுக் கட்டிக்கொண்டு கனவுலகில் இருப்பவர்களுக்கு இது தெரிய நியாயமில்லைத்தான்!

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் செயலைப்போல வேறும் பல திணைக்களங்களின் இனப்பாகுபாடான போக்குகளால் ஏற்படும் விளைவு என்ன?

"எலி வளையானாலும் தனிவளை வேண்டும்!" என்ற சிந்தனை வளராதா?

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை சிவன்கோவில் தேவி மகோற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி 24ம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. 22ம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 23ம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 23ம் திகதி வெள்ளிக்கிழமை உற்சவம் நிறைவுறும். (க)

0 0 0

(உடுவில்)

தமிழ் வித்துவான் இணுவையூர் என். ஆர். சின்னராசா ஞாபகார்த்தவிழா இணுவில் இளம் தொண்டர் சபையினரால் இன்று 14ம் திகதி நடாத்தப்படவுள்ளது.

மேற்படி விழாவின்போது சபையினரால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசைப் பெற்ற செல்விகள் ஸ்ரீகலாயாணி ஸ்ரீரங்கநாதன், தர்ஷினி வேதீஸ்வரன், கு. பவப்பிரியா ஆகியோருக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும். (109)

0 0 0

(உடுவில்)

சந்தரோடை வற்றாக்கை ஸ்ரீவிசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாதசுவாமி கோவிலில் முதன் முறையாக இவ்வருடம் ஜூலை 14ம் திகதி புதன்கிழமை தொடக்கம் பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறவுள்ளது. (109)

0 0 0

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளில் மனைப் பொருளியல் பாடத்தை கற்பிக்கும் மனையியல் ஆசிரியர்களுக்கான முக்கிய கருத்தரங்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. (72)

0 0 0

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் கிளை ஒன்று இன்று புதன்கிழமை மாலை 5மணிக்குத்திறக்கப்படவுள்ளது டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை க. கமலசேகரம், நா. குகன், அ. புண்ணியமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். விழாவுக்கு சுவாமி சித்ரூபானந்தா தலைமை வகிப்பார். (ம)

0 0 0

(யாழ்ப்பாணம்)

வண்-வடமேற்கு ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய மகோற்சவம் இன்று 14ம் தேதி புதன்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பித்து 24ம் தேதி சனிக்கிழமை பூங்காவன விழாவுடன் நிறைவுறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் ஸ்ரீ துர்க்கை அம்பாளின் அலங்கார உற்சவம் இன்று 14ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 27ம் திகதி செவ்வாய்க்கிழமை நிறைவெய்தும்.

22ம் திகதி வியாழக் கிழமை இரதோற்சவமும், வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் ஆடிப்பூர ருது சாந்தி விழாவும் இடம் பெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித சால்ஸ் மகா வித்தியாலயத்தில் ஆங்கில தினம் இன்று 14ம் திகதி புதன்கிழமை 11 மணிக்கு கொத்தணி அதிபர் திருமதி பி. பெ. சின்னத்துரை தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார். 0 0 0

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கி மூலம், ஓய்வூதியம் பெறுபவர்களினது ஆடி மாத ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று புதன்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் 12-00 மணிவரையும் வழக்கம் பரையில் உள்ள தற்காலிக வங்கி காரியாலயத்தில் வழங்கப்படும். (சி)


## தேவை

மாதாந்த தமிழ் சஞ்சிகை ஒன்றிற்கு
தகுதியான ஆசிரியர் தேவை

**தகைமைகள்:**

1. ஆங்கில மொழியறிவு
2. தமிழ் மொழியறிவு
3. ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிபெயர்ப்பு அனுபவம்
4. பத்திரிகைத்துறையில் அனுபவம்.

விண்ணப்பங்கள்
அனுப்பவேண்டிய முகவரி:

**இராசன் அச்சகம்**
144, அருச்சுன வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-319)



நாயன்மார்கட்டு அருள்மிகு
ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர்

## குடமுழுக்கு விழா மலர் வெளியீட்டு விழா

இடம்: வெயிலுகந்த விநாயகர் கோவில் மண்டபம்

காலம்: 14-7-1993 புதன்கிழமை மாலை 4-30 மணி

தலைவர்: திரு. இ. சரவணமுத்து அவர்கள்
மலர்க்குழு தலைவர்

நிகழ்ச்சிகள்:

1. "மங்கள விளக்கேற்றல்"
சிவஸ்ரீ சோ. பாலசுந்தரர் குருக்கள் அவர்கள்
சிவத்திரு ப. விநாயகமூர்த்தி ஐயா அவர்கள்
தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்
2. தலைமையுரை
மலர்க்குழு தலைவர்.
3. வரவேற்புரை:
திரு. இராச. அரசகுலசூரியன் அவர்கள்
மலர்க்குழு உறுப்பினர்
4. ஆசியுரை
சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக் குருக்கள் அவர்கள்
கும்பாபிஷேக பிரதமகுரு
திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள்
உதவி அரச அதிபர், நல்லூர்.
திரு. சி. வேலாயுதம் அவர்கள்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
5. சிறப்புரை:
பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்
தலைவர் தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்,
திரு. தி. கமலநாதன் M. A. அவர்கள்
விரிவுரையாளர் கோப்பாய், ஆசிரியர் கலாசாலை.
திரு. கா. கணேசலிங்கம் அவர்கள்
பொதுச்செயலர் ம. ந. கா. பிரிவு கோப்பாய்.
6. மலர் வெளியீட்டுரை
வித்துவான் க. சொக்கலிங்கம் M. A அவர்கள்
மலர் ஆசிரியர்
7. ஆய்வுரை
திரு. மா. வேதநாதன் பி. ஏ. (சிறப்பு) அவர்கள்
விரிவுரையாளர் இந்து நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்
8. திரு. ப. புஸ்பரத்தினம் M. A அவர்கள்
முதுநிலை விரிவுரையாளர் வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்
9. நன்றியுரை
திரு. நி. தயானந்தன் அவர்கள்
மலர்குழு உறுப்பினர்
10. கலைநிகழ்ச்சி

**தேவஸ்தானத்தார்**

(இ-318)

# இரண்டாவது ஈழப்போரின்பின் திருமலையில் 3,000 தமிழர்களை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் மூவாயிரம் தமிழர்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990ம் ஆண்டிற்கு பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் பின்னரே இவர்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டோர், மற்றும் படையினரால் மர்மமானமுறையில் கடத்தப்பட்டோர், சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போது படையினரிடம் சிக்கியோரும் இத்தொகையில் அடங்குகிறார்கள்.

திருமலை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டாவது ஈழப்போரின்போதே பெருமளவு இழப்புகள், அழிவுகள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இம் மாவட்டத்தில் இடம்பெறும் இராணுவ அச்சுறுத்தல்களினால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும், யாழ்ப்பாணம், இந்தியா போன்ற இடங்களுக்கு சென்றுள்ள தமிழர்களின் வீடுகளில் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

திருமலைமாவட்டம் தொடர்ந்து இராணுவக்கட்டுப்பாட்டிலிருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதும் விடுதலைப்புலிகள் முக்கிய இலக்குகள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டேயிருக்கிறார்கள். (ரீ

# அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் அடையாள அட்டைகளை மீளப்பெறும் விண்ணப்பம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைகளைத்தொலைத்தவர்கள் மீளப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பதிகதி 1993 மே 12ம் திகதியிலிருந்து மேலும் 6 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது என ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் நன்மை கருதி இது தொடர்பாக ஒவ்வொரு பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அடையாள அட்டையைத் தொலைந்தவர்கள் புதிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு கால எல்லை நீடிக்கப்படாமையினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆட்பதிவு திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (162-ரி

# ஜப்பானில் நில நடுக்கம் 240 பேர் உயிரிழப்பு

## 169 பேரைக் காணவில்லை

(டோக்கியோ)

ஜப்பானின் வட பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மிகப் பயங்கரமான நில நடுக்கத்தால் 240 பேர் பலியானார்கள் 169 பேர் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனோரும் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 23 ஆண்டுகளில் ஜப்பானில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் இதுவே மிகப் பயங்கரமானதெனவும் தெரிய வருகிறது.

நேற்றும் சிறிய அளவிலான நில அதிர்வுகள் ஏற்பட்டதாகவும், தொடர்ந்து பாரிய நில நடுக்கம் ஏற்படும் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிலநடுக்கம் ஏற்பட்ட தீவில் உள்ள சிறிய நகரொன்று முற்றிலுமாக சேதமடைந்துள்ளதாகவும், எரிகுழாயில் ஏற்பட்ட தீயினால் 300 வீடுகள் தீப்பிடித்து எரிந்து சாம்பராகின என்றும் தெரியவந்துள்ளது.

மேலும் இரண்டுமாடி ஹோட்டல் ஒன்று இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்குண்டு 30 பேர் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1923ம் ஆண்டுஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஜப்பானில் ஒரு லட்சம் பேர் பலியாகியும் 5 லட்சத்திற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. இதே போன்றதொரு நிலநடுக்கம் மீண்டும் ஏற்பட்டுவிடுமோ எனப்பலர் அஞ்சுகின்றனர். (கே-வி-வி)

# கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் தரத்தில் உள்ள கிராம சேவையாளர், முதலாம் தரத்துக்கான பதவி உயர்வு பெறுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 23ம் திகதிக்கு முன்னர், தங்கள்பகுதிப் பிரதேசச் செயலாளர்ஊடாகவடக்கு-கிழக்கு மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு விண்ணப்பங்களைப் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்கள் யூலை 2ம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்துள்ளது. (162-ரி)

## ருகுணுவில் மண்ணெண்ணை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்தில் எம்.பி. ருகுணு கப்பலில் நேற்று 13ம் திகதி முதல் மண்ணெண்ணை ஏற்றப்படுவதாக அறியவருகிறது.

இன்னும் சில நாட்களில் இக்கப்பல் பருத்தித்துறை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (162)

## இன்று மேற்கொள்ளப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாக தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா தெரிவித்துள்ளது குறித்து கேட்டபோது தாம் தமது பெற்றோர் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவிருப்பதாக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எவருக்கும் உத்தியோக பூர்வமாக தெரிவிக்கவில்லை என யுத்தக் கைதிகளின் சார்பில் பி. எஸ். பண்டாரா என்பவர் தெரிவித்தார்.

யுத்தக்கைதிகள் 33 பேரும் இணைந்து மட்டுமே சாகும் வரையான உண்ணாவிரதத்தைப்பற்றி முடிவு எடுத்ததாகவும் இதில் தமது பெற்றோர் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த நிலையில் கைதிகளின் பெற்றோர் எவ்வாறு உண்ணாவிரதம் மேற்கொள்ள முடிவு எடுத்திருக்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அரச தரப்பினருக்கும் இராஸ்தாபனங்களுக்கும் உண்ணாவிரதம்பற்றி அனுப்பிய கடிதத்தின் பிரதிநிதிகளையும் யுத்தக்கைதிகள் காண்பித்ததாக புலிகளின்குரல் வானொலி தெரிவித்தது. (வி)

## புகலின்-அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரப்போக்குடையோர் ஆர்வம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை அரசியலில் இராணுவத்தின் கை ஓங்கியுள்ளதாக, இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசியல் ரீதியான முடிவுகளை எடுக்கமுடியாத நிலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டுவருவதாக அரசியல்அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள யுத்தக் கைதிகள் விவகாரம் உட்பட பல விடயங்களின் இராணுவத்தின் தீர்மானமே செயற்படுத்தப்பட்டு வருவது தெரிவித்தது. (வி)

## தேசிய அரசுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

எனினும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் எவரேனும் ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அரசாங்கம் அமைக்கும் முயற்சிக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்க விரும்பினால் அவர்களுக்கு அதற்குப் பூரண சுதந்திரம் உண்டு எனவும் திருமதி பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் கட்சி அங்கத்தவர்கள் மீது கட்சி உத்தியோகபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையும், தனித்துவத்தையும் பாதுகாத்துக் கொள்ள இத்தகைய நடவடிக்கை அவசியமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-வி)

## கிரிக்கெட் இலங்கை அணி 289 / 5

(கொழும்பு)

இந்திய அணிக்கும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை அணிக்குமிடையிலான மூன்று நாள் ஆட்டத்தின் இரண்டாவது நாளான நேற்று இலங்கை அணி ஐந்து விக்கெட்டுகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவர் ஹசன் திலகரட்ண 101 ஓட்டங்களையும், சனத்ஜயசூரிய ஆட்டமிழக்காமல் 111 ஓட்டங்களையும் எடுத்தது குறிப்பிடத்தக்கது. (இ

## ரசாயன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாகச் சந்தைக்குப் பழவகைகளைக் கொண்டுவரும் மொத்த வியாபாரிகளின் பெயர், முகவரிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சில்லறை வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். -வி

## பத்திரிகைச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி உண்மைக்குப் புறம்பானது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு நாளை வியாழக்கிழமை கூடவுள்ளது.

தேசிய அரசு அமைக்கும் திட்டத்துக்கு சுதந்திரக்கட்சி ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்ற இந்தக் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக முடிவு எடுக்கப்படும்.

களுத்துறை மாவட்ட எம். பி. டாக்டர் நெவில் பெர்ணாண்டோ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை சம்பந்தமாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும்.

கட்சியின் அங்கத்தவர் ஒருவர் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு முன் கட்சியின் அனுமதியை முன்கூட்டியே பெறவேண்டுமென்ற ஒரு தீர்மானமும் மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கிறது. (இ-வி)

## பிரதேச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது அரசாங்கத்தின் கடமையும் கூட. பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஐ. தே. க. வின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இரண்டு சர்வகட்சி மாநாடுகள் நடத்தப்பட்டன. ஆனால் பிரச்சினைக்கு தீர்வைக் கண்டபாடாக இல்லை என்றும் அவர் கூறினார். (வி)

## பொதுத்தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திரு. குணவர்த்தன பி.பி. சி.க்கு தேசிய அரசு குறித்து மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி, புதிய அரசு ஒன்றைத் தெரிவு செய்யவேண்டியது அவசியமாகும்.

தற்போதுள்ள விசாதாரண நிலையைப் பாதுகாக்கும் பிரிவினரே தேசிய அரசு ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கி வருகின்றனர்.

இந்த நிலையில் தேசிய அரசு ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு மக்கள் ஐக்கிய முன்னணி எந்த விதத்திலும் ஒத்துழைப்பு வழங்காது.

தேசிய அரசு ஒன்றின் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும் பிரிவினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக எந்த ஒரு ஆலோசனையையுமே சமர்ப்பிக்கவில்லை.

தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்காக எனது கட்சி எந்த விதியிலும், எவருடனும் பேச்சுவார்த்தை எதனையும் நிகழ்த்தவில்லை.

அரசு இப்போது ஒரு இக்கட்டான நிலையில் உள்ளது. இந்த நிலையிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பும் விதமாகவே தேசிய அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் சரிந்து வீழ்ந்திருப்பதை எவரும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அரசு எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை.

மக்களைத் தொடர்ந்தும் முட்டாள்களாக்காது உடனடியாகப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த அரசு விரைந்து செயல்படவேண்டும். இ-வி

## ஒய்வூதியம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவேஜங்கள் இன்னும் கொழும்பிலுள்ள ஓய்வூதியத் திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை என்று அங்குள்ள அதிகாரிகள்கூறிவருவதினால் இவர்கள் தமது ஓய்வூதியத்தை கொழும்பில் பெறமுடியாது இருக்கின்றார்கள்.

குறிப்பாக, விதவைகள் தமக்குரிய ஓய்வூதியத்தை கடந்த பல மாதங்களாகப் பெறமுடியாது பெரும் கஷ்டப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வி-ரி

## பொது எழுதுவினைஞர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளதாக யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பரீட்சைத் திணைக்களத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் தங்கள் பிரயாண ஒழுங்குகளை தாங்களாகவே செய்து கொள்ள வேண்டுமென யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (162-ரி)

## ராஜீவ் கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காத்திமிகமிக முக்கிய மனிதர் என்ற ஒரே காரணத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் 'தடா' சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படக்கூடாது.

குற்றம் சாட்டப்பட்டவர் குண்டுகளை வைத்திருக்கவில்லை; குண்டுகளைப் பயன்படுத்தவில்லை, துப்பாக்கிகளையோ வெடிமருந்துகளையோ பயன்படுத்தவில்லை, அரசையோ, சமுதாயத்தையோ அச்சுறுத்தவோ பயமுறுத்தவோ இல்லை, துப்பாக்கியைக் காட்டி தான் கைது செய்யப்படுவதைத் தடுத்துக் கொள்ளவில்லை. எனவே இவரை தடா சட்டத்தின் கீழ் விசாரணை செய்யக்கூடாது என்றார். (இ)

## தகவல்துறை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தலில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: வானொலி மற்றும் தொலைக்காட்சியில் சொந்தக் கருத்துக்களையும் வீண் விளம்பரங்களையும் செய்வதால் மக்களை வெகுவாக துன்புறுத்தி வருகின்றன. இதனால் பல எதிர்வினைவுகளும் ஏற்பட்டுள்ளன.

அரசுதொடர்புசாதனங்கள் மூலம் சொந்தக் கருத்துக்களை வெளியிடக் கூடாது என்றும் மாறாக தகவல் அறிவிப்புகளாகவே இவை பயன்படுத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தலைவரையும், ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவரையும் திரு. பிரேமதாசாவின் மறைவுக்கு பின் புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பதவி விலக்கி விருந்தமை குறிப்பிடத்தக்கது. (கே-வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B